2011 மார்ச் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த நிதியாண்டிற்கான

# பீசீசீ லங்கா லிமிடட் இன்

# ஆண்டறிக்கை

# 2011 மார்ச் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த நிதியாண்டிற்கான நிறுவன தகவல்கள்

| | | |
|---|---|---|
| கம்பனியின் பெயர் | : | பீசீசீ லங்கா லிமிடட் |
| பணிப்பாளர்கள் | : | பிரகேடியர் எல்.எம். தென்னகோன் (தலைவர்)<br>செல்வி எஸ்.டப்.சீ. ஜயமினி |
| பதிவு செய்யப்பட்ட அலுவலகம் | : | இலக்கம் 21<br>ஹல்டோர்ப் மில்ஸ்<br>மீரானியா வீதி<br>கொழும்பு 12. |
| செயலாளர்கள் | : | வ.்.ப இலங்கை மர்ச்சன்ட் வங்கி<br>இலங்கை வங்கி மர்ச்சன்ட் டவர் கட்டிடம்<br>இலக்கம் 28, சென் மைக்கல் வீதி<br>கொழும்பு 03 |
| கணக்காய்வாளர்கள் | : | ஹுலுகல்ல விக்கிரமநாயக்க அன் கம்பனி<br>(பட்டயக் கணக்காளர்கள்)<br>இல. **56,** பாகொடை வீதி<br>நுகேகொட |

# நோக்கு

அடி மட்டத்திலிருந்து ஆரம்பித்து, எமது முன்னர் இருந்து வந்த நன்மதிப்பை மீண்டும் அடைதல்

# செயற்பணி

எமது செயற்பணியாக அமைவது, உயர் கேள்விமிக்க உற்பத்திப் பொருட்கள் மற்றும் நடைமுறை சந்தை விலைக்கேற்ப போட்டித் தன்மைமிக்க விலையொன்றினை ஏற்படுத்திக் கொள்வதாகும்.

**பீசீசீ லங்கா மிலிடட்**

**தலைவரின் மீளாய்வு**

**(2011 மார்ச் 31 இல் முடிவடைந்த நிதியாண்டிற்கானது)**

## <u>தலைவரின் செய்தி</u>

2011 ஆம் ஆண்டின் மார்ச் மாதத்துடன் முடிவடைந்த நிதியாண்டிற்கான கம்பனியின் ஆண்டறிக்கை மற்றும் கணக்காய்வ செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்கள் உரிய காலப் பகுதியினுள் உங்களிடம் சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

மீளாய்விற்கு உட்பட்ட காலப் பகுதியினுள் குத்தகை வருமானம் அடங்கலாக நேர் கணிய மொத்த நிதிப் பாய்ச்சலொன்றை பீசீசீ லங்கா லிமிடட் கொண்டுள்ளது. எவ்வாறாயினும், பாரிய அளவிலான திரண்ட வட்டி பொறுப்பொன்றை மீதப்படுத்தியுள்ளதுடன் கடந்த இதற்கு முன்னர் காணப்பட்ட முறையற்ற வளப் பயன்பாடு காரணமாக கம்பனியினால் இந்த ஆண்டிலும் தொடர்ச்சியாக நட்டம் அடைவதை தடுக்க முடியவில்லை.

கம்பனியினால் முகம்கொடுக்க வேண்டி ஏற்பட்ட கஷ்டங்களை கவனத்திற் கொண்டு, நிலவுகின்ற பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளும் பொருட்டும், பீசீசீ லங்கா மிலிடட் இடம் காணப்படுகின்ற அசைவுறா மற்றும் அசைவுறும் சொத்துக்களை சிறந்த முறையில் பயன்படுத்தும் பொருட்டும் புதிய திட்டங்களை வகுக்குமாறு அரசாங்கத்தினால் உபாய வழி தொழில் முயற்சிகள் முகாமைத்துவ நிறுவனத்திடம் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. உபாய வழி தொழில் முயற்சிகள் முகாமைத்துவ அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள தீர்மானத்தை அடிப்படையாகக் கொண்டு, இலக்கம் 11/0308/553/006 மற்றும் 2011.01.26 திகதிய அமைச்சரவைப் பத்திரத்தின் ஊடாக, பீசீசீ லங்கா லிமிடட் இடம் காணப்படுகின்ற தொழிற்சாலைகளை தெங்கு முக்கோணப் பிரதேசத்திற்குக் கொண்டு செல்வதற்கும், பீசீசீ லங்கா லிமிடட் இற்குச் சொந்தமான காணிகளை விற்பனை செய்ததன் மூலம் கிடைக்கப் பெற்ற தொகையில் ஒரு பகுதியை கம்பனியை மீள உயிர்ப்பிப்பதற்காக முதலீடு செய்வதற்கும் மற்றும் பல வருட காலமாக இருந்து வருகின்ற கடன் தொகைகளை செலுத்தித் தீர்ப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மஹிந்த சிந்தனை எண்ணக்கருவின் வழிகாட்டல்களின் பிரகாரம் உபாய முறை தொழில் முயற்சி முகாமைத்துவ நிறுவனத்தின் முன்மொழிவுகளின் கீழ் கம்பனியின் உத்தேச மீள்கட்டமைத்தலின் ஊடாக கம்பனியின் எதிர்கால பயணம் மற்றும் அபிவிருத்தியினைத் தீர்மானிப்பதற்கு உத்தேசிக்கப்படுவதுடன், எம்மால் இந்த அறிக்கையின் வழிகாட்டல்களின் பிரகாரம் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளமையால் மிக விரைவில் சாதகமான பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

அரச வளங்கள் மற்றும் தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சின் செயலாளர், நிதி அமைச்சின் அதிகாரிகள் மற்றும் கம்பனி ஊழியர்களிடமிருந்து கிடைக்கப் பெற்ற வழிகாட்டல் தொடர்பாக கம்பனியின் நன்றியினைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

**ஒப்பம்**

**……………………………………**

**பொறியியலாளர் (பிரகேடியர்) எல்.எம். தென்னகோன்**

**அதிகாரம் பெற்ற அதிகாரி**

**பீசீசீ லங்கா லிமிடட்**

# கம்பனி பணிகள் பற்றிய பணிப்பாளர் சபையின் ஆண்டறிக்கை

பீசீசீ லங்கா லிமிடட் இன் பணிப்பாளர் சபையினால் 2011 மார்ச் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான, கம்பனியின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களுடன் ஆண்டறிக்கையினை இவ்வாறு சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கேற்ப இந்த நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

## ஆண்டிற்குரிய பெறுபேறுகள்

நிதியாண்டு காலப் பகுதியினுள் தொழிற்பாட்டு இலாபமானது ரூபா. 462,568.40 ஆகும். மீளாய்விற்கு உட்படுத்தப்பட்ட நிதியாண்டினுள் கம்பனியினால் மேற்கொள்ளப்பட்டுள்ள நிதிச் செலவினம் 23.6 மில்லியன் ரூபாவாகும். இதன் அடிப்படையில் கம்பனியானது 23.6 மில்லியன் ரூபா தேசிய நட்டம் ஒன்றினை அடைந்துள்ளது.

### வழங்கிய மூலதனம்

கம்பனியின் மொத்த மூலதனம் ரூபா. 100,000,000/- ஆகக் காணப்படுவதுடன், சாதாரண பங்குகளின் அளவு 10,000,000 ஆகக் காணப்படுகின்ற கம்பனியின் மொத்த பங்குரிமையில் 100% உரிமை இலங்கை அரசாங்கத்தின் திறைசேரியின் செயலாளரினால் வகித்து வருகிறார்.

### பணிப்பாளர் சபை

2011 மார்ச் 31 ஆம் திகதியன்று பீசீசீ லங்கா லிமிடட் இன் பணிப்பாளர் சபை பின்வருமாறு அமைந்துள்ளது.

- திரு. மெனிக் குனரத்ன
- திரு. எச்.ஏ.என்.எஸ். குமார

திரு. மெனிக் குனரத்ன அவர்கள் 2011 யூன் 30 ஆம் திகதி முதல் தமது பதவியை இராஜினாமாச் செய்துள்ளதுடன், திரு. எச்.ஏ.என்.எஸ். குமார அவர்கள் 2011 செப்தெம்பர் மாதம் 28 ஆம் திகதி முதல் இராஜினாமாச் செய்துள்ளார்.

பீசீசீ லங்கா லிமிடட் இற்கு அதிகாரம் பெற்ற அதிகாரி ஒருவரை நியமிப்பதற்காக திறைசேரியின் செயலாளரினால் 2011 யூலை மாதம் 13 ஆம் திகதி வழங்கப்பட்டுள்ள ஆலோசனையின் பிரகாரம், பிரகேடியர் எல்.எம். தென்னகோன் அவர்கள் 2011 யூலை மாதம் 01 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வருமாறு நியமிக்கப்படுள்ளார். அவர் 206 ஆவது பணிப்பாளர் சபை கூட்டத்தின் போது முறையான வகையில் வரவேற்கப்பட்டார். நிதி, திட்டமிடல் அமைச்சின் 2011 செப்தெம்பர் 28 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் திருமதி எஸ்.டப்.சீ. ஜயமினி அவர்கள் பீசீசீ லங்கா லிமிடட் இன் பணிப்பாளர் சபைக்கான திறைசேரியின் பிரதிநிதி/உறுப்பினராக பெயரிடப்பட்டுள்ளார்.

பீசீசீ லங்கா லிமிடட் இன் நடைமுறை பணிப்பாளர்கள் பின்வருமாறு

1. பிரகேடியர் எல்.எம். தென்னகோன் அவர்கள் - தலைவர்
2. செல்வி எஸ்.டப்.சீ. ஜயமினி அவர்கள்

## கணக்குகள் தொடர்பாக பணிப்பாளர்களின் தொடர்புகள்

பணிப்பாளர்கள், 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனி சட்டத்தின் 192 ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட்டுள்ளனர்.

## கணக்காய்வாளர்கள்

ஓய்வுபெற்ற கணக்காய்வாளர்களான, பட்டயம் பெற்ற கணக்காளர் ஹுலுகல்ல விக்கிரமநாயக்க அன் கம்பனியானது தொடர்ந்தும் தமது பணிகளை மேற்கொள்வதற்கு விருப்பம் தெரிவித்துள்ளது. அதன் பிரகாரம், 2012 ஆம் ஆடிண்டிற்காக அவர்களை மீள நியமிப்பதற்கு முன்மொழிவொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், பணிப்பாளர்களினால் அவர்களது கொடுப்பனவு பற்றி தீர்மானிக்கப்படும்.

## கம்பனி செயலாளர்கள்

கம்பனி செயலாளர்களான வ/ப இலங்கை மர்ச்சன்ட் வங்கியினால் உரிய தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளதுடன், குறித்த ஒழுங்கு விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பதிவு செய்துகொள்ளவும் பட்டுள்ளது.

## பதிவு செய்யப்பட்ட அலுவலகம்

கம்பனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் கொழும்பு 12, ஹல்ப்டோர்ப் மில்ஸ் எனுமிடத்தில் அமைந்துள்ளது.

**பணிப்பாளர் சபையின் சார்பாக**

| | | |
|---|---|---|
| **ஒப்பம்** | **ஒப்பம்** | **ஒப்பம்** |
| பிரகேடியர் எஸ்.எல்.எம். தென்னகோன் | செல்வி எஸ்.டப்.சீ. ஜயமினி | வ/ப இலங்கை மர்ச்சன்ட் வங்கி |
| **தலைவர்** | **பணிப்பாளர்** | **செயலாளர்கள்** |

2012 சனவரி மாதம் 10 ஆம் திகதியன்று.

# பீசீசீ லங்கா லிமிடட்

பீசீசீ லங்கா லிமிடட் இற்குச் சொந்தமான பிரதான உற்பத்தி வசதிகளாவன சவர்க்கார தொழிற்சாலை, எண்ணெய் சுத்திகரிப்பு, பொறி இயந்திரசாலை என்பனவாகும். இந்த இயந்திரசாலைகளின் ஊடாக உற்பத்தி செய்யப்படுகின்ற உற்பத்தியாளர்களின் விபரச் சுருக்கமொன்று பின்வரும் பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## (1) சவர்க்கார தொழிற்சாலை

வீட்டு அல்லது சலவை சவர்க்காரம், வாசைன சவர்க்காரம், தாடிமீசை இறக்கும் சவர்க்காரம் என்பன உற்பத்தி செய்தல் மற்றும் கிருமி கொல்லிகள் என்பன இத்தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படுகின்றன. இந்த உற்பத்திப் பொருட்களை அதன் வர்த்தகப் பெயருடன் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| (1) வாசனை சவர்க்காரம் | - சதுன் |
| | - சுவேந்திரா பூ மனமுடையது |
| | - சுவேந்திரா மூலிகை |
| | - ஹெல்த் ஜோய் |
| (2) கிருமி கொல்லி வகைகள் | - பயினோல் |
| | மலசலகூட பேசின் சுத்தம் செய்தல் |
| (3) சுத்திகரிப்பு | - பீங்கான் கழுவும் திரவம் |
| | பீங்கான் கழுவும் தூள் |
| | கை கழுவும் தூள் |
| (4) எயார் ப்ரெஷ்னர் | |

## (2) சுத்திகரிப்பு உற்பத்திகள்

வெள்ளை தேங்காய் எண்ணெய், குக்ஸ் ஜோய் ஆகிய வர்த்தகப் பெயர்களின் கீழ் தேங்காய் எண்ணெய் இந்த சுத்திகரிப்பு நிலையத்தில் உற்பத்தி செய்யப்படுகின்றது. பின்வரும் அடைப்புக்களின் அளவில் இந்த உற்பத்திப் பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றன.

| | |
|---|---|
| குக்ஸ் ஜோய் | - 500 மி. லீட்டர், 01 லீட்டர், 5 லீட்டர், 20 லீட்டர் |
| வெள்ளை தேங்காய் எண்ணெய் | - 500 மி. லீட்டர், 01 லீட்டர், 5 லீட்டர், 20 லீட்டர் |

## (3) குதம் இயந்திரசாலை

இந்த குதம் இயந்திரசாலையில், முக்கியமாக கல்தார் பொதியிடுவதற்காக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்குவதற்கு குதம் உற்பத்தி செய்யப்படுகின்றது. இதனை 200 லீட்டர் மற்றும் 210 லீட்டர்களிலும் உற்பத்தி செய்ய முடியும். தற்போது இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் குதம் அடங்கிய கல்தார் இறக்குமதி செய்யப்படுகின்றது. இந்த இயந்திரசாலைகள் மிகவும் பழைமை வாய்ந்தவையாகக் காணப்படுவதுடன், வாடிக்கையாளர்களின் தேவையாகக் காணப்படுகின்ற மூன்று தார் சிலிண்டர் உடைய குதங்கள் உற்பத்தி செய்யக் கூடியவாறு திருத்தம் செய்ய வேண்டியுள்ளது.

# பீசீசீ லங்கா லிமிடட்

## 2011 மார்ச் 31 ஆம் திகதியன்று நிதிக் கூற்று

### உள்ளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| கணக்காய்வாளர்களின் அறிக்கை | 1 - 3 |
| வருமானக் கூற்று | 4 |
| ஐந்தொகை | 5 |
| உரிமை மாற்றல் பற்றிய கூற்று | 6 |
| நிதிப் பாய்ச்சல் கூற்று | 7 |
| கணக்கீட்டுக் கொள்கைகள் | 8 - 13 |
| நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் | 14 - 29 |

ஹுலுகல்ல விக்கிரமநாயக்க அன் கம்பனி

தொ.பே. இல: 2810429
56, பாகொட வீதி
நுகேகொட
இலங்கை.
மின்னஞ்சல் : hwconsultants@sltnet.lk



பட்டயக் கணக்காளர்கள்

எச்.எஸ். பர்ணாந்து **F.C.A; FSCMA; B.Com (Special)**
……………………………………………………………..
யூ. ஹுலுகல்ல **B.Sc; F.C.A.**
ஏ.ஆர். ஜயசேகர **F.C.A. (Eng. & Wales) F.C.A**
வீ.ஆர். கதிர்காமதம்பி **A.C.A.**

## வ/ப பீசீசீ லங்கா லிமிடட் இன் அங்கத்தவர்களுக்கான சுயாதீன கணக்காய்வாளர்களின் அறிக்கை

## நிதிக்கூற்றுக்கள் பற்றிய அறிக்கை

2011 மார்ச் மாதம் 31 ஆம் தேதியன்று ஐந்தொகை மற்றும் அன்றுடன் முடிவுற்ற ஆண்டிற்குரிய வருமானக் கூற்று, சொத்துக்களின் மாற்றங்கள் பற்றி கூற்று, நிதிப் பாய்ச்சல் கூற்று என்பன உள்ளடக்கப்பட்ட வ/ப பீசீசீ லங்கா கம்பனியின் நிதிக் கூற்று; விசேட நிதிக் கோட்பாடுகளின் சுருக்கமொன்றும் ஏனைய விளக்கங்களடங்கிய குறிப்புக்கள் என்பன எம்மால் கணக்காய்வு செய்யப்பட்டன.

## நிதிக் கூற்றுக்கள் பற்றிய முகாமைத்துவத்தின் பொறுப்புக்கள்.

இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் இந்த நிதிக் கூற்றுக்களை தயாரித்தல், நியாயமானவாறு சமர்ப்பித்தல், என்பன முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். இந்த பொறுப்புக்களாவன: குறித்த நிலையினுள் நியாயமான முறையில் கணக்கு மதிப்பீடுகளைத் தயாரித்தல், பொருத்தமான கணக்கீட்டுக் கோட்பாடுகளை தேர்ந்தெடுத்தல் மற்றும் பயன்படுத்தல் என்பவற்றின்போது ஏற்பட்ட முறைகேடொன்று அல்லது தவறொன்று காரணமாக, பௌதீக ரீதியில் பொய்யான கூற்றுக்களை விளக்கம் நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமானதாக சமர்ப்பிப்பதற்கு உரிய உள்ளக நிருவாகத் திட்டமிடல், நடைமுறைப்படுத்தல் மற்றும் முன்னெடுத்துச் செல்லல் என்பனவாகும்.

## கணக்காய்வு விடயப் பரப்பு மற்றும் அபிப்பிராயம் என்பவற்றை முன்வைப்பதற்கான அடிப்படை

எமது கடமையாக அமைவது, எமது கணக்காய்வுகளை அடிப்படையாகக் கொண்டு இந்த நிதிக் கூற்றுக்கள் பற்றிய அபிப்பிராயமொன்றை வெளியிடுவதாகும். குறித்த நிதிக் கூற்றுக்கள் பௌதீக ரீதியில் போலியான கூற்றுக்களைக் கொண்டுள்ளனவா என பொதுவான தெளிவொன்றினைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு எமது கணக்காய்வுகள் இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் மேற்கொண்டு திட்டமிட்டு வெளியிடப்பட்டுள்ளன.

குறித்த நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிகள், வெளிப்படுத்தல்களை உறுதி செய்யும் சான்றாதாரங்களை உபயோகித்துள்ள கணக்கீட்டு நியமங்கள் பற்றியும் முகாமைத்துவத்தினால் வழங்கப்பட்ட முக்கியமான மதிப்பீடுகள் தொடர்பாகவும் விலைமதிப்பிடல், நிதிக் கூற்றுக்களினூடாக பிரதிபலிக்கப்படுகின்ற மொத்த வெளிக்காட்டல்கள் பற்றி மதிப்பிடல் என்பன கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

எமது கணக்காய்விற்குத் தேவையானவை எனக் கருதப்படும் அறிவிற்கு எட்டக்கூடிய தகவல்கள், விளக்கங்கள் என்பன எம்மால் பெற்றுக்கொள்ளப்பட்டன. அதனால், எமது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு ஏற்ற நியாயமான அடிப்படையொன்று கணக்காய்வின் மூலம் பெற்றுக் கொண்டதாக நாம் நம்புகிறோம்.

## அபிப்பிராயம்

(அ) இந்த நிதிக் கூற்றுக்களின் 16 ஆவது, 18ஆவது குறிப்புக்களின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளதன் பிரகாரம், கம்பனியினால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கடன், வங்கி மேலதிகப் பற்று என்பவற்றுக்கான தவணை வட்டியினை செலுத்துவதில் நிதி நெருக்கடிகளுக்கு முகம்கொடுக்கின்றது.

(ஆ) மீளாய்விற்கு உட்படுத்தப்பட்ட ஆண்டினுள் கம்பனியினால் பணிப்பாளர்களின் தொடர்புப் பட்டியலொன்று பேணிவரப்பட்டில்லை.

(இ) இந்த நிதிக் கூற்றுக்களின் 19 ஆவது குறிப்பிலே விளக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் கம்பனியானது, குறிப்பிடத்தக்களவு நட்டத்தில் இயங்கி நிதி நெருக்கடிகளுக்கு முகம்கொடுத்து வருகின்றது. இந்த விடயங்கள், ஏனைய காரணிகளின் மூலம், இந்த கம்பனியினை இலாபத்தில் இயங்கும் தொழில் முயற்சி ஒன்றாக தொடர்ச்சியாக முன்னெடுத்து செல்வது பற்றிய சந்தேகத்தினைத் தோற்றுவிக்கின்றது. எனினும், இக் கம்பனியானது இலாபத்தில் இயங்கும் தொழில் முயற்சி ஒன்றாக தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்ல முடியாதுபோகும்

பட்சத்தில் மேற்கொள்ள வேண்டிய, தற்போது காணப்படுகின்ற சொத்துக்களின் அளவுக்கும், பொறுப்புக்களின் வகைப்படுத்தலுக்கும் தேவையான சீராக்கல்களை மேற்கொள்ளாது இலாபத்தில் இயங்கும் தொழில் முயற்சி ஒன்றாக தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்ல முடியும் என்ற அடிப்படையின்மீது நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. 2011 மார்ச் 31 ஆம் திகதியன்று கம்பனியின் திரண்ட நட்டமானது ரூ. 224,789,944.59 ஆகக் காணப்பட்டது. மேலும், ஐந்தொகை திகதியன்று கம்பனியின் நடைமுறைப் பொறுப்புக்களின் அளவானது, நடைமுறைச் சொத்துக்களின் அளவிலும் பார்க்க ரூ. 225,924,789.25 தொகை அதிகமானதாகும். இந்த விடயங்களை அடிப்படையாகக் கொண்டு, குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களின் அளவிற்கும், பொறுப்புக்களின் வகைப்படுத்தலுக்கும் சீராக்கங்களை மேற்கொள்ள வேண்டியிருக்கும். அவ்வாறான எதுவித சீராக்கங்களும் இந்த நிதி கூற்றுக்களில் உள்ளடக்கப்படவில்லை. மேலும் இக்கணக்குகளின் மூலம் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 220 ஆவது பிரிவு மீறப்படுகின்றது.

எனினும், 12 ஏக்கர், 03 ரூட், 8.77 அளவுடைய கொழும்பு 12, மீரானியா வீதி, ஹல்ஸ்டோர்ப் மில்லில் வீதவரி இலக்கம் 21 உடைய சொத்து வ/ப பீசீசீ லங்கா கம்பனிக்கு உரித்தாகக் காணப்படுகின்றது என்பதனை குறிப்பிடல் வேண்டும். இந்த சொத்தினை மீள்பெறுமதி செய்தில்லை. இந்த சொத்தின் சந்தைப் பெறுமதியானது 04 பில்லியன் ரூபாவினை விடவும் அதிகமாகக் காணப்படலாம்.

(ஈ) பின்வரும் மீதிகள் தொடர்பான உறுதி செய்தல்கள் எம்மிடம் கிடைக்கப்பெறவில்லை.

| | | |
|---|---|---|
| ஜனவசம கடன் | 4,508,696/= | (கடன் கொடுத்தோர்) |
| வியாபார கடன் பட்டோர் (தேறிய) | 9,257,346/= | (கடன் பட்டோர்) |
| வ/ப களுபோவிடியன தேயிலைக் கம்பனிக்கான கடன் | 24,941,667/= | (கடன் கொடுத்தோர்) |
| வியாபார கடன் கொடுத்தோர் | 29,777,464/= | (கடன் கொடுத்தோர்) |
| இலங்கை வங்கி | 54,190/= | (கடன் கொடுத்தோர்) |

(உ) கம்பனியினால் புரழ்வு வரி, பாதுகாப்பு வரி, பொருட்கள் சேவைகள் மீதான வரி, பெறுமதி சேர்க்கப்பட்ட வரி மற்றும் வீத வரிகளின் மூலம் எழுகின்ற பொறுப்புக்களை உரிய நாளில் அடைத்தில்லை.

| | ரூபா. |
|---|---|
| - புரழ்வு வரி | 141,279.00 |
| - பாதுகாப்பு வரி | 1,079,761.95 |
| - பொருட்கள் சேவைகள் மீதான வரி | 1,279,509.00 |
| - வீத வரி | 21,414,470.00 |
| - பெறுமதி சேர்க்கப்பட்ட வரி | 33,836,598.52 |

எமது பரீட்சிப்பின் மூலம் தெளிவாவது யாதெனில், மேலே குறிப்பிடப்பட்ட முன் (அ) முதல் (உ) வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக தேவை எனக்கருதப்படும் இடங்களில் தீர்மானிக்கப்பட்டுள்ள, நிதிக் கூற்றுக்களின் மீதான தாக்கங்கள் தவிர்ந்த 2011 மார்ச் 31 ஆம் திகதியுடன் முடிவுற்ற ஆண்டிற்கான உரிய கணக்குகளுக்கான பதிவுகளை கம்பனியானது மேற்கொண்டுள்ளது எனவும், எம்மிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள உச்ச தகவல்கள், விளக்கங்களின் பிரகாரம், 2011 மார்ச் 31 ஆம் திகதியன்று கம்பனியின் நடவடிக்கைகளின் நிலை, அன்றுடன் முடிவுற்ற ஆண்டிற்கான அதில் காணப்பட்ட இலாபம், நிதிப் பாய்ச்சல் என்பன உண்மையானதாகவும், நியாயமானதாகவும், வெளிக்காட்டும் விதத்தில் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தினால் கூறப்பட்டுள்ள தகவல்களைப் பெற்றுக்கொடுத்து குறித்த புத்தகங்களுக்கு இணங்க மேற்படி ஐந்தொகை, உரிய வருமானக் கூற்று, நிதிப் பாய்ச்சல் கூற்று மற்றும் உரிமைகளில் மாற்றங்கள் என்பன கணக்கீட்டுக் கோட்பாடுகள் மற்றும் அதன் குறிப்புக்கள் என்பவற்றினை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு ஏற்ப தயாரித்து சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என்பதுமே, எமது கருத்தாகும்.

## கம்பனியுடனான ஒப்பந்தங்கள் பற்றிய பணிப்பாளர்களின் தொடர்புகள்

கணக்குக் குறிப்பு 23 இல் குறிப்பிடப்பட்டுள்ளவை தவிர்ந்த, எமக்குப் பெற்றுத்தந்த தகவல்களின் பிரகாரம், 2011 மார்ச் 31 ஆம் திகதியுடன் முடிவுற்ற ஆண்டு காலப் பகுதியினுள் கம்பனியின் பணிப்பாளர்கள் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ கம்பனியுடன் ஒப்பந்தங்களுடன் தொடர்பினை வைக்கவில்லை என்பதனைக் குறிப்பிட முடியும்.

## ஏனைய சட்ட ரீதியான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைகள் பற்றிய அறிக்கை

இந்த அறிக்கையில் கணக்காய்வுக் குறிப்பு (ஆ) மற்றும் (உ) தவிர்ந்த இந்த நிதிக் கூற்று 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 151(2) பிரிவின் நியதிகளின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**ஒப்பம்/ஹுலுகல்ல விக்கிரமநாயக்க அன் கம்பனி**
பட்டயக் கணக்காளர்கள்
கொழும்பு
2012 ஏப்ரல் 27

## வ/ப பீசீசீ லங்கா லிமிடட்
## வருமானக் கூற்று
2011 மார்ச் 31 ஆம் திகதியுடன் முடிவுற்ற ஆண்டிற்குரியது

(வேறு விதத்தில் குறிப்பிட்டில்லை எனின், சகல தொகைகளும் இலங்கை ரூபாவில்)

| | குறிப்பு | 2010/11 | 2009/10 |
|---|---|---|---|
| தேறிய இலாபம் | 01 | 105,501,644.37 | 9,570,210 |
| விற்ற பொருட்களின் கொள்விலை | 02 | (75,303,993.77) | (75,486,007) |
| **மொத்த இலாபம் / (நட்டம்)** | | 30,197,650.60 | 24,084,203 |
| ஏனைய தொழிற்பாட்டு வருமானம் | 03 | - | 642,857 |
| நிருவாகச் செலவுகள் | 04 | (26,342,830.92) | (27,413,257) |
| விற்பனை விநியோகச் செலவுகள் | 05 | (3,392,251.28) | (3,566,666) |
| **தொழிற்பாட்டு இலாபம் / (நட்டம்)** | | 462,568.40 | (6,252,862) |
| நிதிச் செலவினங்கள் | 06 | (23,647,404.47) | (26,589,495) |
| **வரிக்கு முன் நட்டம்** | | (23,184,836.07) | (32,842,357) |
| | 07 | - | - |
| | | (23,184,836.07) | (32,842,357) |

பக்கம் 08 முதல் 13 வரையில் காணப்படும் கணக்கீட்டுக் கோட்பாடுகள் மற்றும் பக்கம் 14 முதல் 29 வரையில் காணப்படும் குறிப்புக்கள் இந்த நிதிக் கூற்றுக்களின் ஒன்றிணைந்த பகுதிகளாகும்.

அடைப்புக் குறிக்குள் காணப்படுகின்ற தொகைகள் கழிக்க வேண்டியதை குறிக்கின்றது.

## 2011 மார்ச் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை
**(சகல பெறுமதிகளும் இலங்கை ரூபாவில் குறிப்பிடப்படுள்ளன)**

| | குறிப்பு | 2010/11 | 2009/10 |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **நடைமுறையல்லா சொத்துக்கள்** | | | |
| காணி, இயந்திர சாதனங்களும் உபகரணங்களும் | 08 | 15,862,379.30 | 19,589,747 |
| அருவச் சொத்துக்கள் | 09 | 252,001,153.00 | 252,001,153 |
| முதலீடுகள் | 10 | 23,000.00 | 23,000 |
| | | 267,886,532.30 | 271,613,900 |
| நடைமுறைச் சொத்துக்கள் | | | |
| பொருள் கையிறுப்பு | 11 | 12,700,202.30 | 12,518,560 |
| வர்த்தக, ஏனைய வருமதிகள் | 12 | 31,976,165.60 | 30,760,109 |
| காசும் சாசு சார்ந்தவையும் | 13 | 12,958,856.80 | 11,349,737 |
| | | 57,635,224.70 | 54,628,405 |
| **மொத்த சொத்துக்கள்** | | **325,521,757.00** | **326,242,305** |
| **உரிமையான்மையும் பொறுப்புக்களும்** | | | |
| **உரிமையான்மை, மூலதனம் மற்றும் காப்பொதுக்கங்கள்** | | | |
| வழங்கிய மூலதனம் | 14 | 100,000,000.00 | 100,000,000 |
| நின்ற வருமானம் | | (224,789,944.59) | (689,385,197) |
| | | (124,789,944.59) | (589,385,197) |
| **நடைமுறையல்லாத பொறுப்புக்கள்** | | | |
| ஓய்வூதிய நன்மை பற்றிய பொறுப்புக்கள் | 15 | 3,359,597.88 | 2,555,718 |
| வட்டிக் கடன்களும், பெற்ற கடனும் | 16.1 | 163,392,089.76 | 642,678,172 |
| | | 166,751,687.64 | 645,233,889 |
| **நடைமுறை பொறுப்புக்கள்** | | | |
| வட்டிக் கடன்களும், பெற்ற கடனும் | 16.2 | 147,915,146.81 | 138,071,191 |
| வர்த்தக மற்றும் ஏனைய சென்மதிகள் | 17 | 96,066,636.17 | 95,507,936 |
| வங்கி மேலதிகப் பற்று | 18 | 39,578,230.97 | 36,814,486 |
| | | 283,560,013.95 | 270,393,613 |
| **மொத்த பொறுப்புக்கள்** | | 450,311,701.59 | 915,627,502 |
| **மொத்த சொத்துக்களும் பொறுப்புக்களும்** | | **325,521,757.00** | **326,242,305** |

இந்த நிதிக் கூற்றினை தயாரித்து சமர்ப்பிப்பதில் பணிப்பாளர் சபையானது பொறுப்புக் கூறல் வேண்டும். பணிப்பாளர் சபையின் சார்பில் கைச்சாத்திட்டோர்,

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 151(2) நியமங்களின் பிரகாரம் இந்த நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளதென நான் உறுதி செய்கின்றேன்.

(அடைப்புக்குள் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள் கழிக்க வேண்டியதைக் குறிக்கின்றது.)

| ………………… | ………………… | ………………… |
|---|---|---|
| **தலைவர்** | **பணிப்பாளர்** | **கணக்காளர்** |

## வ/ப பீசீசீ லங்கா லிமிடட்
**உரிமை மாற்றல்கள் பற்றிய கூற்று**

**2011 மார்ச் 31 ஆம் தேதியுடன் முடிவுற்ற ஆண்டிற்குரியது**

(வேறு விதத்தில் குறிப்பிட்டில்லை எனின், சகல தொகைகளும் இலங்கை ரூபாவில்)

| | வழங்கிய மூலதனம் | திரண்ட இலாபம்/(நட்டம) | மொத்தம் |
|---|---|---|---|
| 2008 ஏப்ரல் 01 ஆம் திகதியன்று மீதி | 100,000,000.00 | (742,690,368.56) | (642,690,368.56) |
| ஆண்டிற்குரிய தேரிய நட்டம் | - | (32,842,357.38) | (32,842,357.38) |
| முன்னைய ஆண்டின் சீராக்கங்கள் | - | 86,147,529.42 | 86,147,529.42 |
| **2009 மார்ச் 31 ஆம் திகதியன்று மீதி** | 100,000,000.00 | (689,385,196.52) | (589,385,196.52) |
| ஆண்டிற்குரிய தேரிய நட்டம் | - | (23,184,836.07) | (23,184,836.07) |
| முன்னைய ஆண்டின் சீராக்கங்கள் | - | 487,780,088.00 | 487,780,088.00 |
| **2010 மார்ச் 31 ஆம் திகதியன்று மீதி** | 100,000,000.00 | (224,789,944.59) | (124,789,944.59) |

பக்கம் 08 முதல் 13 வரையில் காணப்படும் கணக்கீட்டுக் கோட்பாடுகள் மற்றும் பக்கம் 14 முதல் 29 வரையில் காணப்படும் குறிப்புக்கள் இந்த நிதிக் கூற்றுக்களின் ஒன்றிணைந்த பகுதிகளாகும்.

அடைப்புக் குறிக்குள் காணப்படுகின்ற தொகைகள் கழிக்க வேண்டியதை குறிக்கின்றது.

**வ/ப பீசீசீ லங்கா லிமிடட்**
**நிதிப் பாய்ச்சல் கூற்று**
**2011 மார்ச் 31 ஆம் தேதியுடன் முடிவுற்ற ஆண்டிற்குரியது**

(வேறு விதத்தில் குறிப்பிட்டில்லை எனின், சகல தொகைகளும் இலங்கை ரூபாவில்)

| | குறிப்பு | | **2010/11** | **2009/10** |
|---|---|---|---|---|
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகள் மூலம் உழைத்த நிதிப் பாய்ச்சல்** | | | | |
| **வரிக்கு முன் தேறிய இலாபம்/(நட்டம்)** | | | (23,184,836) | (32,842,357) |
| **சீராக்கங்கள்:** | | | | |
| பெறுமானத் தேய்வுகளுக்காக | 04 | 3,944,350 | | 3,899,368 |
| ஓய்வூதிய பணிக்கொடைகளுக்கான ஏற்பாடுகள் | 15 | 803,880 | | 965,913 |
| குத்தகை வட்டிக்காக | 06 | 924,979 | | 1,229,082 |
| மோட்டார் வாகன விற்பனை மூலம் பெற்ற இலாபம் | 03 | - | | (642,857) |
| கடன் வட்டி | 06 | 19,785,911 | | 22,459,024 |
| | | | 25,459,120 | 27,910,529 |
| **தொழிற்படு மூலதன மாற்றங்களுக்கு முன்னரான தொழிற்பாட்டு இலாபம்/(நட்டம்)** | | | 2,274,284 | (4,931,828) |
| தொழிற்படு மூலதனத்தின் மாற்றல்கள் | | | | |
| கையிருப்பு குறைவு / (அதிகரிப்பு) | 11 | (181,642) | | 13,678,047 |
| ஏனைய கிடைக்க வே/வை குறைவு /(அதிகரிப்பு) | 12 | (1,216,057) | | (4,055,682) |
| ஏனைய கிடைக்க வே/வை குறைவு /(அதிகரிப்பு) | 17 | 558,700 | (838,999) | (130,120) |
| தொழிற்பாட்டு நடவடிக்கை மூலமான தேறிய நிதிப் பாய்ச்சல் | | | 1,435,285 | 4,560,417 |
| **முதலீடுகள் மூலம் பெற்ற நிதிப் பாய்ச்சல்** | | | | |
| ஆதனங்கள், இயந்திர சாதனங்களின் கொள்வனவு | 08 | (216,982) | | (448,525) |
| ஆதனங்கள், இயந்திர சாதனங்களின் விற்பனை | 03 | - | | 642,857 |
| முதலீடுகள் மூலம் பெற்ற தேறிய நிதிப் பாய்ச்சல் | | | (216,982) | 194,332 |
| | | | 1,218,303 | 4,754,749 |
| **நிதி பணிகள் மூலம் பெற்ற பாய்ச்சல்** | | | | |
| குத்தகை செலுத்துதல் | | (2,372,928) | | (2,372,928) |
| நிதி பணிகள் மூலம் பெற்ற தேறிய நிதிப் பாய்ச்சல் | | | (2,372,928) | (2,372,928) |
| ஆண்டினுள் தேறிய குறைவு /(அதிகரிப்பு) | | | (1,154,625) | 2,381,821 |
| ஆண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட தேறிய காசு மற்றும் நிதி சார்ந்தவை | | | (25,464,749) | (27,846,570) |
| | | | (26,619,374) | (25,464,749) |
| ஆண்டின் ஆரம்பத்தில் தேறிய காசு மற்றும் நிதி சார்ந்தவை | | | | |
| **நிதிக் கூற்றிற்கேற்ப காசு மற்றும் நிதி சார்ந்தவை** | | | | |
| கையிலுள்ள காசு | 13 | | 12,958,857 | 11,349,737 |
| வங்கி மேலதிகப் பற்று | 18 | | (39,578,231) | (36,814,486) |
| | | | (26,619,374) | (25,464,749) |

## வ/ப பீசீசீ லங்கா லிமிடட்
### விசேட கணக்கீட்டுக் கோட்பாடுகள்

இந்த நிதிக் கூற்றை தயாரிக்கையில் பின்பற்றப்பட்ட பிரதான கணக்கீட்டுக் கோட்பாடுகள் பின்வருமாறு:

## 1. நிறுவனசார் தகவல்கள்

### 1.1 பதிவும், சட்ட ரீதியான தன்மையும்

வ/ப பீசீசீ லங்கா கம்பனியானது இலங்கையில் பதிவு செய்து கூட்டிணைக்கப்பட்டுள்ள பொறுப்புக்கள் வரையறுக்கப்பட்ட ஒரு கம்பனியாகும். பதிவு செய்யப்பட்ட அலுவலகமும் பிரதான வர்த்தக நிலையமும் கொழும்பு 12, மீரானியா வீதி, ஹல்ப்டோர்ப் மில்ஸ் எனும் இடத்தில் அமைந்துள்ளது.

### 1.2 பிரதான பணிகளும் தொழிற்பாட்டு நடவடிக்கைகளின் தன்மையும்

மீளாய்விற்கு உட்படுத்தப்பட்ட ஆண்டு காலப்பதியினுள் மேற்கொள்ளப்பட்ட பிரதான பணிகள் பின்வருமாறு.

- தேங்காய் எண்ணெய் உற்பத்தியும் வியாபாரமும்
- வாசனை சவர்க்காரம், சலவை சவர்க்காரம், சுத்திகரிப்பு மற்றும் மலசலகூடபாவனை பொருட்களை உற்பத்தி செய்தல் மற்றும் வியாபாரம்
- பண்டகசாலை நிர்மாணம், அஸ்போலற் வியாபாரம்

## 2. பொதுவான கணக்கீட்டுக் கோட்பாடுகள்

### 2.1 இணக்கப்பாடு பற்றிய கூற்று

பின்வருவன தவிர்ந்த, 2011 மார்ச் 31 ஆம் தேதியன்று கம்பனியின் கணக்கீட்டுக் கோட்பாடுகள் மற்றும் குறிப்புக்கள் ("நிதிக் கூற்றுடன்") ஐந்தொகை, வருமானக் கூற்று, உரிமையாண்மைகளின் வித்தியாசங்கள் மற்றும் நிதிப் பாய்ச்சல் என்பன இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- பொருட்களின் பதிவேட்டின் மீதியானது, செலவினம் தேறிய பெறுமானத் தேய்வு பெறுமானம் ஆகிய இரண்டிலும் குறைந்த பெறுமதியினை அடிப்படையாகக் கொண்டு குறிப்பிடப்பட வேண்டுமென இலங்கை கணக்கீட்டு நியமம் 05 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. 2011 மார்ச் 31 ஆம் திகதியன்று திணைக்களத்தின் பொருட்கள் ஏட்டின் மீதியின் செலவின பெறுமதியின்மீது கணக்கிடப்பட்ட காலாவதியான பொருட்களின் குறிப்பிடத்தக்க மீதியொன்று உள்ளடக்கப்பட்ட போதிலும், குறித்த பொருட்களின் தேறிய திரண்ட மீதியானது குறிப்பிடத்தக்களவு பெறுமதியில் குறைந்த பெறமதியினைக் கொண்டுள்ளன.
- படிப்படியான அடிப்படையின்மீது வருமானக் கூற்றின் இனங்காணலுக்காக உடமைகொள்ளல் மூலம் ஏற்பட்ட நன்மதிப்பினை பதிவழிக்குமாறு இலங்கை கணக்கீட்டு நியமம் 25 இல் குறிப்பிடப்பட்டில்லை.

**2.2 தயாரிப்பு முறை**

பிற வழிகளில் குறிப்பிடப்பட்டில்லாத விடத்து, இலங்கை ரூபாவில் குறிப்பிட்டுள்ள நிதிக் கூற்றக்களை அட்டுறு அடிப்படை மற்றும் வரலாற்றுக் கிரய நியதிகளின் பிரகாரம் தயாரித்தல் வேண்டும்.

**2.3 ஒப்பீட்டுத் தகவல்கள்**

கம்பனியினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கோட்பாடுகள், வேறு முறைகளில் குறிப்பிடப்பட்டில்லாதவிடத்து, கடந்த ஆண்டின் கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு சமமானதாகக் காணப்படும். நடைமுறை ஆண்டில் சமர்ப்பிப்பதனை உறுதி செய்வதற்காக தேவையான இடங்களில், கடந்த ஆண்டுகளின் தொகைகள், பதங்கள் என்பன மீண்டும் தயாரிக்கப்பட்டுள்ளன.

**2.4 ஐந்தொகையின் பின்னர் ஏற்பட்ட நிகழ்வுகள்**

ஐந்தொகையின் பின்னர் ஏற்பட்ட சகல பௌதீக நிகழ்வுகளும் கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளதுடன் இந்த நிதிக் கூற்றுக்களில் குறிப்பு இலக்கம் 22 இல், அதற்கான பொருத்தமான சீராக்கங்கள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## 3. சொத்துக்களும் அவற்றின் மதிப்பீட்டு அடிப்படையும்

### 3.1 காணியும் கட்டடமும், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள்

சொத்துக்கள், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் என்பன அரசாங்கத்திற்குச் சொந்தமான வர்த்தக நிருவனமான்றான "பிரிட்டிஷ் ஷிலோன் கோபரேஷன்" நிறுவனத்திற்குச் சொந்தமான செலவினத்திலிருந்து திரண்ட தேய்வுகள் கழிக்கப்பட்டன. சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் செலவினம் என்பது அவற்றின் கொள்வனவு செலவினம் அல்லது நிர்மாண செலவினமாகக் காணப்படுவதுடன் அவற்றை உரிமை கொள்கையில் ஏற்பட்ட யாதேனுமொரு மேலதிக செலவினமும் இதில் உள்ளடங்கும்.

பெறுமானத் தேய்வுகள், அரசாங்கத்திற்குச் சொந்தமான தொழில் முயற்சிக்குரியசெலவினத்தில் எளிமையான நேர்வரிசை முறைமையில் சொத்துக்கள், பொறித்தொகுதி மற்றும்உபகரணங்களின் செலவினத்தின் பாவித்த ஆயுட்காலத்தின் எதிர்பார்க்கப்படும் பெறுமதியினை பதிவளிக்கும் அடிப்படையில் கணிப்பிடப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| கட்டடம் | 05% |
| தளபாடமும் பொருத்திகளும் | 25% |
| பொறித்தொகுதியும் இயந்திர சாதனங்களும் | 10% |
| மோட்டார் வாகனங்கள் | 25% |
| கருவிகளும் உபகரணங்களும் | 25% |
| அலுவலக உபகரணங்கள் | 25% |

கொள்வனவு செய்த ஆண்டில் எதுவித பெறுமானத் தேய்வும் செய்யப்படுவதில்லை. வெளியேற்றும் ஆண்டிலே, முழு ஆண்டிற்குமான தேய்வு ஏற்பாடு செய்யப்படும்.

**3.2 அருவச் சொத்துக்கள் - நன்மதிப்பு**

நன்மதிப்பானது, தொழில் முயற்சி கம்பனியொன்றாக பதிவு செய்யப்பட்ட திகதியன்று, அவ்வாறு கம்பனியொன்றாக மாற்றிய தொழில் முயற்சியின் இனங்காணக்கூடிய சொத்துக்கள், பொறுப்புக்கள் யதேச்சையான பொறுப்புக்களின் நியாயமான பெறுமதியின் மீது கம்பனி வழங்கிய பங்கு மூலதனத்தின் மேலதிகமானதாகும்.

**3.3 முதலீடுகள்**

முதலீடுகள் நீண்டகால தன்மையைக் கொண்டுள்ளதுடன், செலவினத்தின் பெறுமதிமீதே குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த முதலீடுகளின் பெறுமதியினை குறைப்பதற்காக எதுவித சீராக்கங்களும் செய்யப்பட்டில்லை.

**3.4 பொருட்களின் கையிருப்பு**

பொருட்களின் கையிருப்பானது செலவினத்திற்கே காட்டப்பட்டுள்ளது. கம்பனியானது பொருட்களை மதிப்பீடு செய்வதற்காக முதலில் வந்தவை முதலில் வெளிச்செல்லல் (FIFO) என்ற முறையை பின்பற்றுகின்றது. ஏற்பாடொன்று தேவைப்படும் காலாவதியான பொருட்கள் அடங்கிய பட்டியல் ஒன்றிலே அந்த பொருட்கள் குறிப்பிடத்தக்களவு காணப்டுகின்ற இடங்களிலே, காலாவதியான, மந்தமான மற்றும் சேதமடைந்த பொருட்களுக்காக ரூ.75,830/= பெறுமதியான ஏற்பாடொன்று வழங்கப்பட்டுள்ளது.

**3.5 வியாபார மற்றும் ஏனைய வருமதிகள்**

வியாபார மற்றும் ஏனைய வருமதிகள் என்பன, அறவிட முடியாக்கடன் மற்றும் ஐயக்கடனாக கிடைக்க வேண்டிய காசுகளுக்காக செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகளின் தேறிய பெறுமதியினை கைகூடச் செய்வதற்காக அவற்றை மதிப்பீடு செய்த பெறுமதிகளிலேயே குறிப்பிடப்பட்டுள்ளன.

**3.6 காசும், காசு சார்நதவையும்**

காசும், காசு சார்ந்தவை என்பன, வங்கியிலுள்ள காசு, கையிலுள்ள காசு என்பவற்றின் மீதியையே குறிக்கின்றது. கேட்கும்போது திருப்பிச் செலுத்த வேண்டிய மற்றும் கம்பனியின் நிதி முகாமையின் தேவைகளில் ஒரு பகுதியாகக் காணப்படுகின்ற வங்கி மேலதிகப் பற்று, நிதிப் பாய்ச்சல் கூற்றின் காசு மற்றும் காசு சார்ந்தவைகளினதும் ஆக்கக் கூறுகளாக உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 4.0 பொறுப்புக்களும் ஏற்பாடுகளும்

### 4.1 வர்த்தக மற்றும் ஏனைய சென்மதிகள்

வர்த்தக மற்றும் ஏனைய சென்மதிகள் என்பன அவற்றின் செலவினத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

### 4.2 மூலதன பொறுப்புக்களும் எதிர்பாராத நிகழ்வுகளும்

ஐந்தொகை திகதியன்று மூலதனச் செலவினம் தொடர்பான கட்டுப்பாடுகள் மற்றும் முறையற்ற பொறுப்புக்கள் என்பன நிதிக் கூற்றுக்களின் சம்மந்தப்பட்ட குறிப்புக்களில் வெளியிடப்பட்டுள்ளன.

### 4.3 ஓய்வூதிய பணிக்கொடைக்கான செலவினம்

**உறுதியான பிரதிலாபத் திட்டம் - பணிக்கொடை**

பணிக்கொடை என்பது உறுதியான பிரதிலாப திட்டமொன்றாகும். 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடை செலுத்தல் சட்டத்தின் பிரகாரம் பணிக்கொடை செலுத்துவதற்கு கம்பனியானது கட்டுப்பட்டுள்ளது. இந்த பொறுப்பினை நிறைவேற்றும் பொருட்டு பணிக்கமர்த்தப்பட்ட ஆண்டு முதலே பூர்த்தி செய்யப்பட்ட ஒவ்வொரு ஆண்டிற்காகவும், ஒவ்வொரு அரைமாத சம்பளத்தின் அடிப்படையில் கணக்கிடப்பட்ட பெறுமதிக்கு சமமான ஏற்பாடொன்று ஐந்தொகையில் முன்கொண்டு செல்லப்பட்டுள்ளது. ஆண்டின் ஆரம்பத்தில் முன்கொண்டு வரப்பட்ட ஏற்பாடுகள் மற்றும் வருடமொன்றின் இறுதியில் முன்கொண்டு செல்லப்படும் ஏற்பாடுகளிடையே ஏற்படும் வித்தியாசமானது வருமானக் கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. பணிக்கொடை பொறுப்புக்காக நிதியத்தினை பெற்றுக் கொடுத்தலோ அல்லது முறையான ஆயுள் கணக்கெடுப்பொன்றோ மேற்கொள்ளப்பட்டில்லை. இந்த விடயமானது, ஐந்தொகையில் ஓய்வூதிய நன்மைப் பொறுப்புக்களின் கட்டுப்பாடுகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

### 4.3.2 குறித்தொதுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டம் - ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்

அனைத்து நிறைவேற்று பணியாட்டொகுதியினர், அலுவலகப் பணியாட்டொகுதி, பீசீசீ பணியாட்டொகுதி என்பன ஊழியர் சேமலாப நிதியத்தின் அங்கத்தவர்களாகக் காணப்படுவதுடன் ஏனைய பணியாளர்கள், கம்பனியினால் அந்த உழியர்களின் மொத்த சம்பளத்தில் முறையே 15% மற்றும் 3% பங்களிப்பொன்று பெற்றுக்கொடுக்கப்படுகின்ற ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் என்பவற்றிற்கு தகைமை பெற்றுள்ளனர்.

சகல பணியாளர்களையும் உள்ளடக்கும் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் என்பவற்றிற்கான பங்களிப்பு தொடர்பாக காணப்படும்

பொறுப்புக்களை ஏற்கின்ற சந்தர்ப்பங்களில், இலாபத்தில் அல்லது நட்டத்தில் செலவினமொன்றாக இனங்காணப்பட்டுள்ளது.

**4.3.3 ஏற்பாடுகள்**

முன்னைய நிகழ்வொன்றின் பிரதிபலனாக கம்பனியொன்றின் சட்ட ரீதியான அல்லது உருப்படியான பொறுப்பொன்று உள்ள சந்தர்ப்பங்களில், ஏற்பாடுகள் செய்யப்படுவதுடன் அந்த பொறுப்புக்களை தீர்ப்பதற்காக பொருளாதார நன்மைகள் வெளியே செல்ல வேண்டிய தேவையொன்றின் அவசியம் இனங்காணப்பட்டுள்ளது.

## 5. வருமானக் கூற்று

**5.1 வருமானம்**

கம்பனியின் விற்பனை புரள்வின் மூலம் பொருட்களின் பட்டியல் பெறுமதி, வியாபாரக் கழிவு மற்றும் விற்பனை திருப்பங்களின் தேறிய பெறுமதி என்பன காட்டப்பட்டுள்ளன.

**5.2 வருமானத்தை இனங்காணல்**

பொருளாதார நன்மைகள் கம்பனிக்கு அதிகமாக கிடைக்கப்பெறுமென கருதும், வருமானத்தை உறுதியாக அளவிடக்கூடிய அளவினைக் குறிப்பிட்டுவருமானம் இனங்காணப்பட்டுள்ளது.

**5.3 செலவினத்தை இனங்காணல்**

ஆண்டிற்குரிய இலாபத்தை அல்லது நட்டத்தை கணிப்பிடும்போது, தொழில் முயற்சியை நடாத்திச் செல்லும்போதும் மூலதனச் சொத்துக்களை வினைத்திறனாக பராமரிக்கும்போதும் மேற்கொண்ட செலவினமானது வருமானத்திலிருந்து அறவிடப்பட்டுள்ளது.
